# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/24 - 2018 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2018.12.18

*2102/24 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்.:வ/18/02/2014.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2016/D/91.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலகப்பிரிவில், ராகம்பத்துவ சிறு பிரிவில் நவம்மஹர கிராமத்தில், 179, எலபிடிவல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. கம் 4121 மற்றும் 2018.12.03 ஆந் திகதியிட்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 01 எனக் குறிப்பிடப்பட்ட 0.0671 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் காணும் காணித் துண்டுகளின் விபரங்கள்:

*1.* **துண்டு இல. 01**

காணியின் பெயர்: கஜுகஹாகும்புர; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: இல. 79/2, டெம்பில் லேன், பபிலியான வீதி, நெதிமால, தெஹிவளை; விஸ்தீரணம் : 0.0671 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ.டீ.ரீ.சீ. ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2018, திசெம்பர் 17.

*01 - 39*




*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*